DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | **SC Case No.325/2021** |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW 4 வரதகவுண்டர்** |
| Father's Name/ Husband name | பொன்னுசாமி |
| Village | வடபுத்தூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 76 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 05.04.2024
A1 to A4 Present.

**முதல் விசாரணை**

நான் வடபுத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 வரை யான சாட்சிகள் நளினி, வெங்கடேசன், ரம்யா ஆகியோரை தெரியும். அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகளின் வீடு நிலத்தில் உள்ளது. என்னுடைய வீடு அவர்களின் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது. அவர்களின்வீடு அரை பல்லாங்கு தூரத்தில் உள்ளது. எங்கள் வீட்டில் இருந்து பார்த்தால் அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகளின் வீடு தெரியும். சுமார் 5 வருடத்திற்கு முன்பு இரவு 11.30 மணிக்கு நான் வீட்டில் படுத்து கொண்டிருந்த போது அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகளின் வீட்டில் இருந்து சத்தம் கேட்டது. அதனால் நான் என் மகனை எழுப்பி சொல்லிவிட்டு அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகளின் வீட்டிற்கு பேட்டரி அடித்துகொண்டு சென்றேன். அங்கு சென்ற போது 3 , 4 நபர்கள் ராடு , கம்பி வைத்து கொண்டு வீட்டிற்கு மேலும் , கீழும் சென்று கொண்டிருந்தார்கள். அந்த நபர்களை நான் இருட்டில் பார்த்தேன். அதனால் அவர்களை தற்போது என்னால் அடையாளம் சொல்ல முடியாது. ஆஜர் எதிரிகள் சம்பவ நேரத்தில் இருந்தார்களா என்று என்னால் சொல்ல முடியாது. நான் சென்று பார்த்த போது அ.சா.1 நளினி என்பவருக்கும் , அசா.2 வெங்கடேசன் என்பவருக்கும் தலையில் காயம்பட்டு இரத்தம் வந்து கொண்டிருந்தது. அ.சா.1 , அ.சா.2 ஆகீயோரின் மகள் ரம்யா என்பவர் அழுது

கொண்டிருந்தார். அவர்களை விசாரித்த போது நளினி என்பவரின் தாலியை அறுத்து சென்று விட்டதாக சொன்னார்கள். இது சம்பந்தமாக அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் மருமகன் ஆசை என்பவருக்கு என் மகன் தகவல் சொன்னார். பின்னர் காயம் பட்ட அ.சா.1 , அ.சா.2 ஆகியோரை சிகிச்சைக்காக செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சம்பவ நேரத்தில் மூன்று நபர்களை பார்த்தேன். ஒரு நபர் தான் இரும்பு ராடு வைத்திருந்தார். ஆசை தம்பி என்பவரின் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும். சத்தம் கேட்டு நான் சென்ற போது பயந்துகொண்டு திரும்பி வந்துவிட்டேன். அதனால் சம்பவம் நடந்தது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. என் வீட்டிற்கும் அ.சா.1 முதல் 3 ஆகியோரின் வீட்டிற்கும் இடையே உள்ள நிலம் கரம்பாக உள்ளது. அந்த கரம்பில் நான் ஒலிந்துகொண்டேன். ஆசை தம்பிக்கு என் மகன் தான் தகல் சொன்னார் . நான் தகவல் சொல்லவில்லை . மெத்தையில் இருந்து வந்தவர்கள் கிழக்கு பக்கம் சென்றார்கள். நான் சென்று முதலில் அ.சா.1 நளினி என்பவரை பார்த்தேன். அதன் பிறகு வெங்கடேசன் என்பவரை பார்த்தேன். 108 ஆம்புலன்சுக்கு நான் தகவல் சொல்லவில்லை. ஆசை தம்பி தான் காயம்பட்டவர்களை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு வந்தார். காயம்பட்டவர்கள் ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்ற போது நான் செல்லவில்லை.